Vol. 6, Issue : 01 June - 2022

புதிய அவையம்

ISSN : 2456-821X

==================================================================

## *3500 ஆண்டுகளுக்கு முந்தைய பெருங்கற்கால ஈமக்காடு*

**முனைவர் ஆ.பிரபு**
*உதவிப்பேராசிரியர்*
*தமிழ்த்துறை.*
*தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)*
*திருப்பத்தூர்.*

==================================================================

*வாணியம்பாடிக்கு கிழக்கே 17 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள கிராமம் 102ரெட்டியூர். இவ்வூரில் உள்ள வன்னிய பெருமாள் என்ற சமூக ஆர்வலர் அளித்த தகவலின்பேரில் அங்கு சென்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அங்கு ஏலகிரி மலையின் பின்புற சரிவில்* ***நீலிக் கொல்லி*** *என்ற பகுதியில் 15-க்கும் மேற்பட்ட* ***கற்குவைகள்*** *காணப்படுகின்றன. அவற்றுள் மூன்று கற்குவைகள் கல்வட்டத்திற்கு உள்ளே அமைக்கப்பட்டுள்ள. ஒவ்வொரு கற்குவைகளும் சுமார் 15 மீட்டர் சுற்றளவு கொண்டு பிரம்மாண்டமாக காட்சி அளிக்கின்றன. மேலும் ஒரு கற்குவைக்கு நடுவே கற்திட்டை அமைப்பும் காணப்படுவது சிறப்புக்குரியதாகும். இங்குள்ள கற்குவைகளுக்கு அருகாமையில் மூன்று இரும்பு உருக்கும் ஆலை இருந்ததற்கான தடயங்கள் காணப்படுகின்றன. அங்கே இரும்பு உலைக்குள் காற்றினைச் செலுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் ஊது குழாய்கள் நிறைய சிதறிக் கிடக்கின்றன.*

செவ்வக வடிவில் இரும்பு உருக்கும் உலை இருந்ததற்கான அடித்தளம் இன்னும் அதே நிலையில் இங்கு காணப்படுவது சிறப்புக்குரியதாகும்.



**இரும்பு உருக்கு உலையின் எச்சங்கள்**

இவையாவும் இப்பகுதியில் பெருங்கற்கால மக்கள் வாழ்ந்தனர் என்பதற்கான உறுதியான தடயங்கள் ஆகும். கற்குவைகள் என்பவை பெருங்கற்கால மக்களது ஈமச் சின்னங்கள் ஆகும். அன்றைய காலத்து மக்கள் இறந்தவர்களை அடக்கம் செய்துவிட்டு அந்த இடத்தை அடையாளம் காண்பதற்காகப் பல்வேறு அமைப்புகளை அங்கே ஏற்படுத்திவைத்திருந்தனர்.



**கற்திட்டை**

அவை **கல்வட்டம், கற்திட்டை, கற்பதுக்கை, நெடுங்கல்** போன்றவையாகும். இந்த வரிசையில் **கற்குவை** என்கிற அமைப்பும் அடங்கும். அதாவது இறந்தவரை அடக்கம் செய்து அதற்கு மேலே பல கற்களைக் குவியலாகக் குவித்து வைத்து அந்த இடத்தை அக்கால மக்கள் அடையாளப்படுத்தி இருந்தனர்.



**கற்குவை**

இப்படிப்பட்ட கற்குவைகள் திருப்பத்தூர் மாவட்டத்தில் ஒரே இடத்தில் 15க்கும் மேற்பட்டவை கிடைத்திருப்பது கவனத்திற்குரியதாகும். இந்த இடம் பெருங்கற்கால மக்கள் வாழ்ந்த பகுதி என்பதற்கான வலுவான தடயங்களாக

இத்தடயங்கள் அமைகின்றன. ஏற்கனவே இவ்வூருக்கு அருகிலுள்ள குண்டுரெட்டியூர் மலைப்பகுதியின் அடிவாரத்தில் இதுபோன்ற இரும்பு உருக்கும் ஆலை இருந்ததையும், அங்கே கற்கால மக்கள் வாழ்ந்ததையும் அடையாளப்படுத்தி இருந்தோம். அதனைத் தொடர்ந்து இப்பகுதியில் கிடைத்திருப்பது கவனத்திற்குரியதாகும். இப்பகுதியை தொல்லியல் துறையினர் முறையான ஆய்வினை மேற்கொள்ளும்போது இங்கு மேலும் பல ஆச்சர்யமூட்டும் தகவல்கள் கிடைக்க கூடும் என்பதில் ஐயமில்லை.

***களஆய்வு :*** ***முனைவர் ஆ.பிரபு***

***தகவலாளர் :*** ***வன்னியப் பெருமாள்***

***இடம் :*** ***102 ரெட்டியூர்***